**செ.வெ.எண்: 34** **நாள்:18.01.2018**

**பத்திரிக்கைச்செய்தி**

புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைநாடும் இளைஞர் படித்து பயன்பெறும் வண்ணம் தன்னார்வ பயிலும் வட்டம் என்ற பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இப்பயிற்சி மையத்தின் மூலமாக பல்வேறு வகையான போட்டித்தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்திடத் தேவையான பல்வேறு புத்தகங்கள், மாதாந்திர சஞ்சிகைகள் மற்றும் பத்திரிக்கைகள் அடங்கிய நூலகம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-II-ல் அடங்கிய நேர்முகத்தேர்வுக்கான சார் பதிவாளர், துணை வணிக வரி அலுவலர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் உள்ளிட்ட 1241 பணியிடங்களுக்கு 2015ம் ஆண்டில் விளம்பரம் வெளியிடப்பட்டது. இத்தேர்விற்கான முதல்நிலை தேர்வு 26.07.2015 அன்று நடைபெற்றது. இதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முதன்மை தேர்வு 21.08.2016 அன்று நடைபெற்றது. முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான நேர்முகத்தேர்வு 23.01.2018 முதல் 19.02.2018 வரை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தில் நடைபெற உள்ளது. இதற்கான மாதிரி நேர்முகத்தேர்வு மாவட்ட வேலைவாய்ப்ப அலுவலக வளாகத்தில் 21.01.2018 அன்று நடைபெற உள்ளது. இந்த மாதிரி நேர்முகத்தேர்வானது சிறந்த வல்லுநர்களை கொண்டு நடைபெற உள்ளது. இந்த நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ள விருப்பம் உள்ள முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் கலந்து கொள்ளலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் புதுக்கோட்டை.**